1992 ஏப்ரல் 21]

முற்பகல் 10-10

திரு. தே. ஜனார்த்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரத்தைத் தலைநகரமாகக் கொண்ட விழுப்புரம் வள்ளலார் மாவட்டத்தை இந்த ஆண்டு தொடங்கிட இதயத் தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டு உள்ளார்கள். அதன் காரணமாக விழுப்புரம் நகரம் மிகவும் வேகமாக முன்னேறி வருகிறது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் விழுப்புரம் நகரத்தின் தேவையை மிக நன்றாக அறிவார்கள். இந்த திட்டத்தை விரைவில் துவக்கிட அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்தை விரைவாக முடிப்பதற்கு அரசு எல்லாவிதமான முயற்சியையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 583, திரு. வெ. பழனிசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

583—

திருப்பூர் இரண்டாவது கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*3311.—திரு. வெ. பழனிசாமி :

மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருப்பூர் இரண்டாவது கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணி எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இப்பணிகள் எப்பொழுது முடிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருப்பூர் இரண்டாவது கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணி முன்னேற்ற நிலையில் உள்ளது.

(ஆ) தலைமை பணியிடத்தில் நீர் சேகரிக்கும் கிணறு, பிரதான குழாய் அமைக்கும்பணி, சுத்திகரிப்புப் பணி, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் பணிகள் அனைத்தும் நடப்பு நிதி ஆண்டில் (1992—93-க்குள்) முடிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டு போடப்பட்ட திருப்பூர் இரண்டாவது கூட்டுக் குடிநீர் திட்டம் இன்றைக்கு மிகுந்த ஆமை வேகத்தில் கடந்த காலத்தினுடைய அரசின் காலத்திலே முடங்கிப் போய் கிடந்தது. கடந்த சட்டமன்றத்தினுடைய தேர்தல் நேரத்திலே திருப்பூர் தொகுதியினுடைய மக்களுடைய உணர்வுகளை புரிந்து கொண்டு எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்த கூட்டுக் குடிநீர் திட்டத்தை மிக விரைவாக எங்களுடைய அரசு முடித்துத் தரும் என்று மக்கள் மத்தியிலே வாக்குறுதி அளித்ததன் விளைவாக இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னர் மேட்டுப்பாளையம் தலைமை நீரேற்றும் நிலையம், பிரதான குழாய் வரி அமைத்தல், ஓவர்டேங்க் கட்டுகின்ற பணிகள் மிக வேகமாக நடைபெற்றுவருகிறது. இந்த பணிகள் இவ்வாண்டு முடிவிற்குள் முடிவடையுமா? எப்போது முடிவடையும்? இதற்காக இவ்வாண்டு நிதி ஆதாரம் எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்பதைப் பற்றி நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பணிகளை இந்த ஆண்டிலேயே முடிப்பதற்காக அரசால் சுமார் 8.54 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த பணிகளை இந்த ஆண்டிலேயே முடிப்பதற்கான எல்லா விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டிலே போடப்பட்ட திட்டம், இன்று 10 ஆண்டுகள் உருண்டோடிவிட்டது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்திலே முடிவடைகிறது என்பது திருப்பூர் தொகுதி மக்களுக்கு பெருமகிழ்ச்சி அளிக்கிறது. ஆகவே, மிக விரைவாக 4 லட்சம் மக்களுக்கும், வெளியில் இருந்து வரும் ஒரு லட்சம் மக்களுக்கும் வாழ்வளித்துக்கொண்டிருக்கின்ற பிரதான தொழில் நகரமான திருப்பூர் நகரத்திற்கு முன் உரிமை அளித்து இவ்வாண்டு இறுதிக்குள் முடித்துத் தருகின்ற வாய்ப்பை அரசு உருவாக்கித் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிச்சயமாக இந்த நடப்பாண்டுக்குள் இந்த திட்டத்தை முடிப்பதற்கு எல்லாவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1992 ஏப்ரல் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 584, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

584—

பூலாம்பட்டி குடிநீர்த் திட்டம்.

*4214. திருமதி க. பழனியம்மாள் ;

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டத்தில் இராசிபுரம் தொகுதிக்கான பூலாம்பட்டி குடிநீர்த் திட்டம் எப்பொழுது முடிவடையும்?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் மாவட்டத்தில் இராசிபுரம் தொகுதிக்கான பூலாம்பட்டி குடிநீர்த் திட்டம் அதாவது இராசிபுரம் இடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டம் 1994 ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் நல்ல மழை பெய்து இருந்த போதிலும், ராசிபுரம் பகுதியில் மழை குறைவாக பெய்து உள்ளதால், இப்போது தண்ணீர் அளவு மிகவும் குறைந்து விட்டது. ராசிபுரம் நகரில் 10 நாட்களுக்கு ஒரு முறைதான் தண்ணீர் வழங்கப்படுகிறது. கிராமங்களிலே தண்ணீர் கஷ்டம் இந்த கோடையிலே ஆரம்பித்துவிட்டது. எனவே விரைந்து செயற்படுத்தி, இந்தத் திட்டத்தை இன்னும் குறைந்த காலத்திலேயே முடிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். வழி ஓரங்களில் உள்ள பல கிராமங்கள் விடுபட்டிருக்கின்றன, அவைகளையும் சேர்த்துக்கொள்ள அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினை 1994 ஆம் ஆண்டிற்குள் நிறைவேற்றுவதற்கு எல்லாவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் ராசிபுரம், இடப்பாடி நகராட்சிகளைத் தவிர, 9 பேரூராட்சிகளுக்கும், 155 வழியோர கிராமங்களுக்கும் பயன் அளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.